அமுதமழையில் நனையும் பொழுதில் விழைந்த பயிரம்மா
என் உயிரில் எழுதும் கவிதை முழுதும் உனது பெயரம்மா 2
அந்திவானம் சிந்தும் நேரம் வந்து சேரம்மா
சந்தமேதும் எந்தன் பாடல் வந்து பாடம்மா 2

அமுதமழையில் நனையும் பொழுதில் விழைந்த பயிரம்மா
என் உயிரில் எழுதும் கவிதை முழுதும் உனது பெயரம்மா

வாசல் வரும் நாளில் உன்னை கோலமிட துடிக்கிறேன்
ஆசையரை மோத அந்த வானமாக சிவக்கிறேன் 2
காலம் எல்லாம் உன்மடியில் கண்ணுறங்க நினைக்கிறேன் 2
கண்ணுறங்கும் போதினிலும் உன் நினைவில் அலைகிறேன்

கண்ணை இமை மூடும் நேரம் உன்கனவு வருகுது
காதில் விழும் ஓசையாவும் உன் குரலாய் விழுகிது 2
எந்தன் முகம் பார்க்கும் போதும் உந்தன் முகம் தெரியுது 2
சந்தணத்தை பூசும்போதும் செந்தணலாய் எரியுது

அமுதமழையில் நனையும் பொழுதில் விழைந்த பயிரம்மா
என் உயிரில் எழுதும் கவிதை முழுதும் உனது பெயரம்மா 2
அந்திவானம் சிந்தும் நேரம் வந்து சேரம்மா
சந்தமேதும் எந்தன் பாடல் வந்து பாடம்மா 2